உலக அளவில் திரைத்துறையின் உச்சபட்ச விருதான

ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய கலைஞானி கமல்ஹாசனுக்கு அழைப்பு!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன்.29-

உலக அளவில் திரைத்துறையில் உச்ச பட்ச விருதான ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் கலைஞானி கமல்ஹாசனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

உலக அளவில் திரைத்துறையின் உச்ச பட்ச விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுக்கான குழுவில் இணைய அழைப்பினைப் பெற்றிருக்கும் அன்பு நண்பர் – கலைஞானி திரு. கமல்ஹாசன் அவர்களுக்கு என் வாழ்த்துகள்!

மொழி – தேச எல்லைகளைக் கடந்து திரைத்துறையினர் மீது தாங்கள் செலுத்திய பெரும் தாக்கத்துக்கான தாமதமான அங்கீகாரமே இது. இன்னும் பல தேடி வரும் உயரம் தங்களுடையது!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு

பருத்தியை தரம் பிரித்து கொண்டு வந்து விற்பனை செய்து பயன் பெறலாம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 29–

தமிழ்நாட்டில் பருத்திக்கு உரிய விலை பெற விவசாயிகள் பருத்தியை தரம்பிரித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங் களுக்குக் கொண்டுவந்து விற்பனை செய்து பயன் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ்நாட்டில் பருத்தி சராசரியாக 3.66 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு 52,700 மெட்ரிக் டன் பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. 2024–25ஆம் ஆண்டில், மூன்றாவது முன்மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டில் 2.55 இலட்சம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 36,000 மெட்ரிக்டன் பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் நெல் தரிசில் பருத்தி 54,700 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு 7,700 மெட்ரிக்டன் பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆர்.சி.எச். 659 பி.ஜி. II, ஆர்.சி.எச். 386 பிஜி II, சூப்பர்காட் 115 பி.ஜி. II, போன்ற பருத்தி இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டன. நடப்பு ஆண்டில் 4.4 இலட்சம் ஏக்கரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.511 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை!

இந்நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களிலுள்ள 17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 14,115 விவசாயிகள் மற்றும் 26 வர்த்தகர்கள் பருத்தி பரிவர்த்தனை செய்திட பதிவு செய்துள்ளனர். இதுவரை, 9 கோடி ரூபாய் மதிப்பிலான 1,511 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. பருத்தியின் தரத்திற்கேற்ப குவிண்டால் ஒன்றிற்கு அதிகபட்ச விலையாக ரூ.7,700, குறைந்தபட்ச விலையாக ரூ.4,111, சராசரி விலையாக ரூ.5,850 என்ற அளவில் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தொடர்ந்து பருத்தி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இயல்பாக பருத்தியின் தரத்திற்கேற்ப ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளால் மின்னணு தேசிய வேளாண் சந்தை வாயிலாக (eNAM), மறைமுக ஏல முறையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி தமிழ்நாடு முழுவதும் இதுவரை 1,976 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

பருத்தியின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுவதால் பருத்தியின் தரத்தை நிர்ணயிக்கும் காரணிகளான ஈரப்பதம் (Moisture), இழை நீளம் (staple length), இழையின் நுண்மைத்தன்மை (Micronaire), முதிர்ச்சி மற்றும் நீண்ட இழை தரக்கூடிய பருத்தி இரகங்கள் குறித்து வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய பருத்தி வாரியமும் தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதல் செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் பருத்தியில் இலாபகரமான விலைபெற பருத்தியைத் உலர்த்தி, தரம்பிரித்து அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மாநில அலுவலர்கள் டெல்டா மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொண்டு, விவசாயிகள் மற்றும், வியாபாரிகளுடன் கூட்டங்கள் நடத்தி, பருத்திக்கு இலாபகரமான விலை கிடைக்கச்செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் பாகநிலை முகவர்கள் (BLA 2) பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவிப்பு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்பட வேண்டியது குறித்து விருதுநகர் தெற்கு மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டை, சாத்தூர், திருவில்லிபுத்தூர், இராஜபாளையம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய / நகர / பேரூர் கழகங்களில் இன்று (29.06.2025 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு பயிற்சி கூட்டங்கள் நடைபெற உள்ளது. இக்கூட்டங்களை ஒன்றிய / நகர/ பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக தொகுதி பொறுப்பாளர்கள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தேதி	தொகுதி	இடம்
29.06.2025 ஞாயிறு காலை 10 மணி	அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி	வேல்ராஜன் மண்டபம், அருப்புக்கோட்டை
29.06.2025 ஞாயிறு பகல் 11 மணி	சாத்தூர் சட்டமன்றத் தொகுதி	வெங்கடேஸ்வரா பேலஸ், சாத்தூர்
29.06.2025 ஞாயிறு மாலை 4 மணி	திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம்	கந்தசாமி – அழகம்மாள் மண்டபம் தம்பிபட்டி
29.06.2025 ஞாயிறு மாலை 5 மணி	திருவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி திருவில்லிபுத்தூர் ஒன்றியம் திருவில்லிபுத்தூர் நகரம்	லட்சுமி நாராயணா மண்டபம், இந்திராநகர் திருவில்லிபுத்தூர்
29.06.2025 ஞாயிறு மாலை 6 மணி	இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி	J.S.A.மண்டபம் ஞாயிறு மாலை 06.00

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
செயலாளர்
விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஒருமாத காலத்திற்கு

ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 29-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி சுற்றுலாத்துறை மேம்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் பயன் பெறும் வகையில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களை தரிசனம் செய்யும் வகையில் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா 18.07.2025 அன்று முதல் 15.08.2025 வரை ஒரு மாத காலத்திற்கு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயக்கப்படுகிறது.

ஆடி அம்மன் சுற்றுலா - சென்னை 2 (ஒரே நாளில் 10 அம்மன் கோவில்கள்)

சென்னை திருவல்லிகேணி சுற்றுலா வளாகத்திலிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு கற்பகாம்பாள் திருக்கோவில், மைலாப்பூர் - முண்டகண்ணி அம்மன் திருக்கோவில், மைலாப்பூர் கோலவிழியம்மன் திருக்கோவில், மைலாப்பூர் - ஆலயம்மன் திருக்கோவில், தேனாம்பேட்டை முப்பாத்தம்மன் திருக்கோவில், தி.நகர் - பிடாரி இளங்காளி அம்மன் திருக்கோவில், சைதாப்பேட்டை அஷ்டலெஷ்மி திருக்கோவில், பெசண்ட் நகர் - காமாட்சி அம்மன் திருக்கோவில், மாங்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோவில், திருவேற்காடு அருள்மிகு பாதாள பொன்னியம்மன் திருக்கோவில், கீழ்பாக்கம் ஆகிய திருக்கோயில் களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.800/.

ஆடி அம்மன் சுற்றுலா - மதுரை

மதுரை, ஓட்டல் தமிழ்நாடு, அழகர் கோயில் சாலையிலிருந்து அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில், மதுரை - அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், வண்டியூர்அருள்மிகு காளியம்மன் திருக்கோவில், மடப்புரம் அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோவில், விட்டனேரி - அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம் - அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோவில், அழகர் கோவில் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களிலும் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/.

ஆடி அம்மன் சுற்றுலா - திருச்சி

திருச்சியில் வெக்காளியம்மன் திருக்கோவில், உறையூர் கமலவல்லி நாச்சியார் திருக்கோவில், உறையூர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவில், திருவானைக்காவல் மாரியம்மன் திருக்கோவில், சமயபுரம் உஜ்ஜயினி மாகாளி அம்மன் திருக்கோவில், சமயபுரம் மதுர காளியம்மன் திருக்கோவில், சிறுவாச்சூர் பொன்னேஸ்வரி அம்மன் திருக்கோவில், பொன்மலை - உக்கிர காளியம்மன் திருக்கோவில், திருச்சி ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1100/.

ஆடி அம்மன் சுற்றுலா - தஞ்சாவூர்

வராகி அம்மன் (பெரிய கோவில்) திருக்கோவில், தஞ்சாவூர் - பங்காரு காமாட்சி அம்மன் திருக்கோவில், தஞ்சாவூர் - மகா மாரியம்மன் திருக்கோவில், புன்னை நல்லூர் - கற்பரட் சாம்பிகை திருக்கோவில், திருக்கருகாவூர் - துர்கை அம்மன் திருக்கோவில், பட்டீஸ்வரம் - பாடைகட்டி மகா மாரியம்மன் திருக்கோவில், வலங்கைமான் - அருள்மிகு நாகநாதசுவாமி கிரிகுஜாம் பிகை திருக்கோவில், திருநாகேஸ்வரம் - காசி விஸ்வநாதர் விசாலாட்சி திருக்கோவில், மகாமக குளம், கும்பகோணம் - ஐராவதேசுவரர் (பெரியநாயகி அம்மன்) திருக்கோவில், தாராசுரம் ஆகிய திருக்கோயில்களை கண்டு தரிசனம் செய்து வரும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றுலாவில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். இச்சுற்றுலாவிற்கான கட்டணம் ரூ.1400/.

இச்சுற்றுலாக்களில் பயணிக்கும் அனைவருக்கும் மதிய உணவு, அனைத்து கோவில்களின் பிரசாதம் மற்றும் சிறப்பு விரைவு தரிசனம் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே சுற்றுலாப் பயணிகள், ஆன்மீக அன்பர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தமிழகத்தின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள அம்மன் கோவில்களை ஆன்மீக சுற்றுலாப் பயணிகள் தரிசிக்கும் பொருட்டு, 5 நாட்கள் 108 அம்மன் கோவில்கள் சுற்றுலாவிற்கும், ஆடி மாத அமாவாசை தினத்தை முன்னிட்டு 3 நாட்கள் இராமேஸ்வரம் **(ஆடி அமாவாசை)** சுற்றுலாவிற்கும் முன்பதிவு தொடங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இந்த சுற்றுலாக்களுக்கு http://www.ttdconline.com என்ற இணையத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், விவரங்களுக்கு 180042531111, 04425333333, 04425333444 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்காசி வடக்கு மாவட்டம்

வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் கோ.பூசைப்பாண்டியன் அவர்கள், தனது உடல்நிலை காரணமாக முழு ஈடுபாட்டுடன் கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **டி.எம்.எஸ். அன்புக்கரசு** (7/53ஏ, மேலத் தெரு, வடமலாபுரம், தென்காசி மாவட்டம்.) அவர்கள் வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

" அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 28.06.2025.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தென்காசி வடக்கு மாவட்டம்

மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சி சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு கிளைக் கழகங்களுக்குட்பட்ட பாக எண்கள். மற்றும் கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சேர்ந்தமரம் கஸ்பா ஊராட்சியில் உள்ள **சேர்ந்தமரம் கிளைக் கழகம் சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்குஆகிய 3 கிளைகளாக** பிரிக்கப்பட்டு பின்வரும் வாக்குச் சாவடி பாக எண்கள் கொண்டதாக அமையும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட கிளைகளுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

சேர்ந்த மரம் மேற்கு கிளை : 80, 83, 84 ஆகிய 3 வாக்குச் சாவடி பாக எண்கள்.

சேர்ந்த மரம் கிழக்கு கிளை : 81, 82, ஆகிய 2 வாக்குச் சாவடி பாக எண்கள்.

சேர்ந்த மரம் தெற்கு கிளை : வாக்குச் சாவடி பாக எண். 79

கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **சேர்ந்தமரம் மேற்கு, சேர்ந்தமரம் கிழக்கு, சேர்ந்தமரம் தெற்கு** ஆகிய கிளைக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கிளைக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

சேர்ந்த மரம் மேற்கு கிளை :
பொறுப்பாளர் : பி. முருகன், பால்பண்ணை தெரு, சேர்ந்தமரம்-627 857.

சேர்ந்த மரம் கிழக்கு கிளை :
பொறுப்பாளர் : எஸ்.செல்வராஜ், 77/5, வடக்கு தெரு, சேர்ந்தமரம்-627 857.

சேர்ந்த மரம் தெற்கு கிளை :
பொறுப்பாளர் : கே.ஜெயராஜ், 82ஏ/1, கீழத் தெரு சேர்ந்தமரம்-627 857

" அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 28.06.2025.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ந.உ. சிவசாமி

ஜூன் 29 (2023)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

மாவட்டப் பிரதிநிதியாகவும் – முப்பது ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – பத்தாண்டுகள் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து முத்துப்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை விற்பனை குழு உறுப்பினர், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், எடையூர் சங்கந்தி கூட்டுறவு சங்க தலைவர் என பல்வேறு அமைப்புகளில் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.